பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 84

செவ்வாய்க்கிழமை
18 பெப்ரவரி 2025

மாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வடக்கில் வெப்பம் தகிக்கும்

கொழும்பு, பெப். 18
வடக்கு மாகாணத்தில் இன்று வெப்பமான காலநிலை நிலவும் என்றும் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கை 11

# நாடு அநுரவோடல்ல நாணய நிதியத்தோடு

## பயனற்ற பட்ஜெட் என சஜித் சரமாரித் தாக்கு!



கொழும்பு, பெப்ரவரி 18
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தைப் பார்க்கையில், 'நாடு அநுரவோடு' என்ற ஆணையை மக்கள் வழங்கியிருந்தாலும், இன்று 'நாடு நாணயநிதியத்தோடு' நிற்பதை உணரமுடிகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார். 11

## வரவு – செலவுத் திட்டத்தில் பெரும் நிதிப்பற்றாக்குறை

### ரூபா 2,200 பில்லியன் துண்டு!

கொழும்பு, பெப். 18
2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான நிதிப்பற்றாக்குறையாக 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. மானியங்கள் உட்பட 2025ஆம் 11

## ஊடகவியலாளர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு

விரிவு :- பக். 11

## ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதாந்தம் 5,000 ரூபா நிதி!

விரிவு :- பக். 11

புத்தாண்டின்போது
## மானிய விலையில் உணவுப் பொதிகள்

விரிவு :- பக். 11

## ஓய்வூதியம் உயரும்

விரிவு :- பக். 11

## பட்ஜெட் மீதான விவாதம் இன்று

கொழும்பு, பெப். 18
ஜனாதிபதியும் நிதியமைச்சருமான அநுர குமாரவால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் தொடர்பிலும், ஜனாதிபதியின் பட்ஜெட் உரை தொடர்பிலும் இன்று எதிர்க்கட்சி தனது தரப்பு நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவுள்ளது. எதிர்க்கட்சித் 11

யாழ்ப்பாண நூலக எரிப்பு
## தமிழர் மனங்களில் இருந்து வலி இன்னும் நீங்கவில்லை

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு
### ரூ.100 மில்லியனில் அபிவிருத்தி



கொழும்பு, பெப். 18
யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதால் ஏற்பட்ட வலி அந்த மக்களின் மனங்களில் இருந்து இன்னும் நீங்கவில்லை. தேர்தலுக்காக நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் இதுபோல் உலகில் வேறு எங்கும் நடந்ததில்லை என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். 11

பட்ஜெட்டின் சிறப்பம்சம்
விரிவு :- பக். 06

## ரணிலின் பட்ஜெட்டே பிரதியெடுப்பு

11

## வடக்கின் வீதிகளுக்கு 5,000 மில்லியன் ரூபா!

### கூடுதல் நிதி வழங்கவிருந்த நிலையில் இது போதுமென அதிகாரிகளே கூறினராம்

கொழும்பு, பெப். 18
வடக்கு மாகாணத்தில் கிராமிய பாலங்கள் மற்றும் வீதி அபிவிருத்திக்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலான நிதி வழங்கப்படவிருந்த நிலையில், இந்தத் தொகை போதுமென அதிகாரிகளே தெரிவித்தனர் என்று ஜனாதிபதி அநுர கூறியுள்ளார். யாழ். மாவட்ட 11

## அரச ஊழியர்களுக்கு ஏமாற்றமான பட்ஜெட்

கொழும்பு, பெப். 18
அரச ஊழியர்களுக்கு 20 ஆயிரம் ரூபா ஊதிய உயர்வு கோரிய போராட்டங்களை வழிநடத்திய இன்றைய அரசாங்கம், தனது பட்ஜெட்டில் மிகவும் சொற்பத் 11




'வடக்குப் பக்கம் பட்ஜெட் காத்து கடுமையா அடிச்சிருக்கு கண்டியளோ'

## 3 வயதுக் குழந்தையும் மாமனும் கிணற்றில் சடலமாக மீட்பு

வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 18
மூன்று வயதான குழந்தையொன்றும் தாய்மாமனும் சங்கரத்தைப் பகுதியில் உள்ள திக்கிராய் குளத்தில் இருந்து சடலமாக 11

## உள்ளூராட்சித் தேர்தல் நிறைவேறியது சட்டம்!

கொழும்பு, பெப். 18
நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று மாலை தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 17.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3992 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 02 06 22 41 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 17.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1059 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 12 44 46 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 17.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0018 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 7 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 17.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2098 |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 03 32 33 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 17.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5750 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 1 4 3 4 8 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 17.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1780 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 02 08 22 38 |
| விசேட எழுத்து | S |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 17.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 325 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 8 5 |

### மன்னார் மருத்துவமனையில்

# மருத்துவநிபுணர் விலகியதால் சிறுவர் சிகிச்சைகள் ஸ்தம்பிதம்

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

**மன்னார், பெப். 18**

**மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றிய சிறுவர்களுக்கான விசேட மருத்துவ நிபுணர் திடீரெனப் பணியில் இருந்து விலகியுள்ளதால், குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.**

சிறுவர்களுக்கான நோயாளர் விடுதியான 7ஆவது விடுதியில் கடமையாற்றிய மருத்துவர் கடமையிலிருந்து விலகியுள்ளமையால், அங்கு சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளை சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் அல்லது வவுனியா மருத்துவமனைகளுக்கு அழைத்துச்செல்ல வேண்டியுள்ளது.

இந்த விடயத்தில் வடமாகாண ஆளுநர் உடனடியாக தலையிட்டு பிறிதொரு மருத்துவ நிபுணரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் ஆஸாத் எம். ஹனிபாவிடம் கேட்டபோது, மருத்துவ நிபுணர் தான் வெளிநாடு செல்லவுள்ளதால் கடமைக்கு சமூகமளிக்கமாட்டேன் என அறிவித்துள்ளார். எனவே தற்காலிகமாக வவுனியாவில் இருந்து ஒரு மருத்துவ நிபுணரை கடமைக்கு அமர்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (எ-25,56)

# இந்திய - இலங்கை மீனவர் பேச்சுக்கு ஏற்பாடு செய்க!

### இந்திய மத்திய அரசை வலியுறுத்துகிறார் கனிமொழி



சென்னை, பெப்.18

இந்திய இலங்கை மீனவர்களிடையேயான பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், படகுகளையும் விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தின் காரைக்காலிலும், இராமேஸ்வரத்திலும் நேற்றுமுன்தினம் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இராமேஸ்வரத்தில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்திய இலங்கை மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என தமிழக அரசுதொடர்ந்தும் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துவருகிறது. இதுவரை மீனவர் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை. ஆயினும் தமிழக முதல்வர் விரைவில் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண்பார் - என்றார். (எ-33)

# எரிசக்தி அமைச்சருடன் சந்தோஷ் ஜா சந்திப்பு

கொழும்பு, பெப்.18

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கிடையே நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இருநாடுகளுக்கும் இடையிலான எரிசக்தி கூட்டிணைவு தொடர்பில் பல்வேறு விடயங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டன என்று இலங்கைக்கான இந்தியத்தூதரகம் தெரிவித்துள்ளது. (எ-25)

# பெற்றோல் குண்டுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இலக்கத்தகடு மறைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்றும், இந்தத் தாக்குதலில் உணவகத்தின் முன்கதவு சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-125)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 17.02.2025 | திங்கட்கிழமை | 0458 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| X | 1 4 5 4 7 0 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 17.02.2025 | தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2724 | K | 49 57 69 75 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.02.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 01 11 22 68 | 4885 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.02.2025 | திங்கட்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 28 33 55 59 | 4436 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 17.02.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 12 | 27 41 63 74 | 1900 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.02.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 09 26 65 73 | 2550 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.02.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 01 07 43 46 | 2104 |



# மரக்கடத்தல் முறியடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் மரக்குற்றிகளை கடத்திச் சென்ற பாரவூர்தி பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளது. பாரவூர்தியின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான வேம்பு மற்றும் நாவல் மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபரை சான்றுப்பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-25,27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியைப் பிடிக்கும்

# எதிரணியின் எண்ணம் வெறும் கனவு மட்டுமே

## பிரதமர் ஹரிணி கூறுகின்றார்



கொழும்பு, பெப்.18

உள்ளாட்சிசபைத் தேர்தலுக்குக்கூட அஞ்சும் எதிர்க்கட்சிதான் ஆட்சியை கைப்பற்றுவது தொடர்பாகப் பேசுகின்றது. ஆனால் இது வெறும் கனவு மாத்திரமே என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்திக்குச் செல்வதற்கு நாம் பயப்படவில்லை. மக்களின் நிலைப்பாட்டை அறியவும் நாம் அஞ்சவில்லை. தேர்தல்திகதியைதேர்தல் ஆணைக் குழுவே நிர்ணயிக்கவேண்டும். நாம் தேர்தலைப் பிற்போடுமாறு கேட்கப்போவதில்லை. தேர்தல் ஊடாக மக்கள் மத்திக்குச் செல்வதற்கு அஞ்சும் எதிரணியே ஆட்சியைப் பிடிப்பது பற்றிக் கதைக்கின்றது. அது முடியுமா? முடியாது. கனவு மாத்திரமே என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33-44)

# தேர்தலுக்கு அச்சப்படவில்லை காலம்தான் பொருத்தமில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது

எந்தத் தேர்தலை முகங்கொடுப்பதற்கும் நாங்கள் பின்வாங்கியதில்லை. தேர்தல் பரப்புரைக் காலத்தில் யாருக்கும் அநீதி ஏற்படக்கூடாது என்பதனாலேயே உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுவை புத்தாண்டுக்குப் பின்னர் கோருமாறு கோரிக்கை வைக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார. உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு எதிர்க்கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கின்றது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துக்கும் நிலையில், அதற்குப் பதிலளிக்கும் வகையில் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு தயாராகும் காலப்பகுதி பொருத்தம் இல்லாமல் இருக்கிறது. ஏப்ரல் மாதம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் தேர்தல் பரப்புரைப் பணிகளை முறையாக மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்படும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு இந்த மாதம் வேட்புமனுக் கோரினால், வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் பூரணமாகக் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்படும். அதேநேரம் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்டால் அனைவருக்கும் பாதிப்பாக அமையும் என்றார். (எ-33)

# ரணிலை சந்தித்தார் ஜெய்சங்கர்

புதுடெல்லி, பெப்.18

ஓமானில் நடைபெற்ற 8ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஓமான் வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து இந்தியா அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ள 8ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாடு, கடந்த 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் மஸ்கட்டில் நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாநாட்டில் விருந்தினர் பேச்சாளராகக் கலந்துகொண்டார். (எ-33)



# சவால் விடும் சக்தியாக மொட்டு எழுச்சி பெறும்

## ஜோன்ஸ்டன் கூறுகின்றார்

தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் சக்தியாக மீண்டும் எழுச்சி பெறுவோம். நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மீண்டும் எமது பலத்தை உறுதிப்படுத்துவோம்.

இவ்வாறு பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளுக்காகப் பெற்றுக்கொண்ட இழப்பீட்டுத்தொகையை பகிரங்கமாகக் குறிப்பிடும் அரசாங்கம் வீடுகளுக்கு தீ வைத்தவர்களின் பெயர் விவரங்களையும் வெளியிடவேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கு அறிவுறுத்தியிருந்தேன். ஆனால் இதுவரையில் அரசாங்கம் அதற்குப் பதிலளிக்கவில்லை. தற்துணிவு என்பதொன்று இருந்தால் வீடுகளுக்கு தீவைத்தவர்களின் விபரங்களை வெளியிடுமாறு மீண்டும் சவால்விடுக்கிறேன் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான சகல பணிகளையும் முன்னெடுத்துள்ளோம்.

நாடளாவிய ரீதியில் போட்டியிடுவோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு சவால்விடுக்கும் பிரதான சக்தி யாக மீண்டும் எழுச்சி பெறுவோம் என்றார். (எ-33)




குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தபடி இருக்குமாம். கச்சேரிக் கட்டப்பொம்மர் அவர் செய்யிற தில்லுமுல்லுகளை உடனுக் குடன எப்பிடியோ மணந்துபிடிச்சு சொல்லுற தால பட்சியில கடும் 'பட்சமா' இருக்கிறாராம். பட்சி இல்லாக்குறைக்கு பேப்பர்காரரைக் கண்டால் ' உங்கட பேப்பர் ஏன் இப்பிடி எனக்கு எதிரா எழுதுது? உங்கட பிழைப்புக்காக அடுத்தவையைப் பற்றி எழுதுறதோ உங்கட வேலை? எப்பிடியோ நீங்கள் என்னட்ட வரத்தானே வேணும். அப்ப பார்த்துக்கொள்ளுறன் எண்டு பொரிஞ்சு தள்ளுறாராம். அவர் பிழை விடாட்டி எதுக்குப் பட்சி அவரைப் பற்றிச் சொல்லப்போகுது. அதோட அடுத்தவையின்ர பிழைப்பில மண்ணள்ளிப் போடுற வேலையளை பட்சி பார்த்துக்கொண்டிருக்காது. அதுகளை உந்தக் கட்டப்பொம்மர் செய்யிற படியாலதான் அப்பிடியான சம்பவங்கள் வெளியில வருகுது.

அதோட கட்டப்பொம்மர் மாதிரி பேப்பர்கள் ஒண்டும் அடிக்கடி கலர் மாறுறேலை. எப்பவும் ஒரே கொள்கையிலதான் பேப்பர்கள் நிக்கிறது. ஆனால் உந்தக் கட்டப்பொம்மர் முந்தி வீணையோட சேர்ந்து நாதம் வாசிச்சார், பிறகு அமுல்பேபியிட்ட அதிகாரம் வந்தவுடன் அப்பிடியே வீணையைத் தூக்கியெறிஞ்சிட்டு அவருக்கு 'பட்டர்' போட வெளிக்கிட்டார். பழையபடி வீணைக்காரருக்கு பவர் வந்ததும் அமுல்பேபியை அந்தரத்தில விட்டிட்டு தாடிக்காரருக்கு தாளம் போடத்தொடங்கினார். இப்ப எல்லாம் போய் திசைகாட்டிக்காரரோட பசை மாதிரி ஒட்டிக்கொண்டு திரியிறார். இப்பிடியெல்லாம் கலர் மாறாட்டி, தன்னைவிட தகுதியான ஆக்கள் இருந்தும் இப்பிடி ஒரு பொறுப்பான பதவியில இருக்கேலாது எண்டது கட்டப்பொம்மருக்குத் தெரியும். அதோட ஆருக்கு எப்பிடி வாளி வைக்கிறது எண்டதிலையும் ஆள் நடமாடும் கம்பஸ்தான். இப்பிடிப்பட்ட கட்டப்பொம்மர் பேப்பர்காரரை வைச்சுச் செய்வன் எண்டு கறுவியம் வைச்சால் அது அவருக்குத்தான் ஆப்பு எண்டதும் எப்ப விளங்கப்போகுதோ தெரியேலை.

அதோட கட்டப்பொம்மர் தனக்கு எதிரான சிற்றரசர்மாரை தனித்தனிய கூப்பிட்டு அவையின்ர மண்டையைக் கழுவி, அந்த எட்டப்பரும் தங்களுக்குள்ள கொழுவுப்படுறமாதிரியான வேலையளையும் பாக்கிறாராம். இப்பிடி அவையள் தங்களுக்குள்ள சண்டை பிடிச்சு பிரிஞ்சா, பிறகு அவையாலதனக்குத்தலையிடி வராது எண்டது அவரின்ர திட்டம் போல. 'என்ர பக்கம் வந்தியள் எண்டா உங்களுக்கு இடமாற்றம் வராமல் பார்த்துக்கொள்ளுவன்'எண்டது தான் அவரின்ர பிரம்மாஸ்திரமா இருக்காம். அதுக்கு சிலர் எடுபட்டிட்டினம் எண்டும் கதை. அப்பிடி ஆரெல்லாம் விலைபோட்டினம் எண்டது மலிஞ்சால்

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும், பாதிப்பு எதுவும் இருக்காது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கி விடுவது நல்லது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனை களை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்

**கடகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தாயின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிறிது அலைச்சல் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆனால், உடல்நலனில் சற்று கவனம் தேவைப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முடிவுகளைத் தெளிவாகச் சிந்தித்து எடுப்பீர்கள். இளைய சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்** இன்று காரியங்கள் முடிவதில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டு நீங்கும். மனதில் அடிக்கடி சோர்வு ஏற்பட்டு விலகும். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு விலகி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையுடன் வீண்வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. இன்று எந்த விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். மற்றவர்களுடன் விவாதம் செய்ய நேரிட்டால் விலகிச்செல்வது நல்லது.

# சிவில் அமைப்புகளை உள்வாங்கி புதிய சட்ட உருவாக்கத்தை செய்க

## சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை

கொழும்பு, பெப்.19

சிவில் சமூக அமைப்புகள் தொடர்பான புதிய சட்ட உருவாக்கத்தின்போது அந்தச் செயன்முறையில் சிவில் சமூக அமைப்புகள் உள்வாங்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் சிவில்சமூக அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

24 அமைப்புகள் ஒன்றிணைந்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளன.

அதில் உள்ளதாவது-

சிவில் சமூக அமைப்புகள் மீதான அழுத்தங்கள் ஒன்றுகூடுவதற்கான அடிப்படை உரிமையைப் பாதித்துள்ளது. இது அரசுக்கும், சிவில் சமூகத்துக்கும் இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தும். கொழும்புக்கு வெளியே இயங்கும் அநேகமான சிவில் சமூக அமைப்புகளை அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான செயலகத்தில் தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் ஏற்கனவே கம்பனிச் சட்டத்தின் கீழ் இலாபநோக்கற்ற வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

சிவில் சமூக அமைப்புக்கள் பதிவுசெய்தல் மற்றும் கண்காணிக்கப்படுவதுடன் தொடர்புடைய விடயங்களில் பாதுகாப்பு அமைச்சின் பங்கேற்பை முற்றாக நீக்கவேண்டும் என்றுள்ளது. (எ-33)

# இசை நாடக அரங்கேற்றமும் கௌரவிப்பு நிகழ்வும்

இசை நாடக அரங்கேற்றமும் கௌரவிப்புவிழாவும் ஆலயச் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளன. நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் மற்றும் நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பக்த நந்தனார் இசை நாடகம் அரங்கேற்றமும், நாடக ஆசிரியர் இணுவையூர் ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரனின் கௌரவிப்பும், ஆன்மீக விருந்தினர் உரையும் இடம்பெறவுள்ளன. தேவஸ்தானத் தலைவர் சி.தயாநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் தேவஸ்தானப் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் மற்றும் சிவாக்ஷர கௌசிகக் குருகுலப்பொறுப்பாளர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா ஆகியோர் ஆசியுரையையும், சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் மற்றும் தேவஸ்தான முன்னாள் தலைவர் த.நடராஜா ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

ஆன்மீக விருந்தினராகக் கோப்பாய் கல்வியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் சமூக மாமணி, கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வின் தொகுப்புரையை இளஞ்சைவப்புலவர் க.கயிலைவாசன் ஆற்றவுள்ளார். (எ-25)

# கடலில் நீராடிய சிறுவன் மாயம்

கல்கிசைக் கடலில் நீராடச்சென்ற சிறுவன் நீரில் அடித்துச்செல்லப்பட்டுக் காணாமல் போயுள்ளார். கங்கொடவில பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவனே காணாமல் போயுள்ளார் என்று கல்கிசைப் பொலிஸார் தெரிவித்தனர். சிறுவன் நண்பர்களுடன் கடலுக்கு நீராடச் சென்றிருந்தபோதே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். பொலிஸ் உயிர்காக்கும் பிரிவு மற்றும் கல்கிசைப் பொலிஸ் அதிகாரிகள் இணைந்து சிறுவனை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (எ-25)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 18.01.1939



மறைவு 19.01.2025

கடந்த 19.01.2025 அன்று தனது 86 வது வயதில் பிரான்சில் காலமான எமது குடும்பத் தலைவர்

**அமரர் சபாபதி சண்முகம்பிள்ளை**

(யாழ் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரும், இலங்கை வருமான வரித்துறை திணைக்களத்தின் ஓய்வு பெற்ற அதிகாரியும்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (18.02.2025) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் (பிரான்சில்) நடைபெற்று தொடர்ந்து மதியபோசன நிகழ்வு நாளை (19.02.2025) புதன்கிழமை 2 Tue de fantante 77700 serris France என்னுமிடத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்க்கொத்து சாத்தியவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.
+33 604 538 622

பிரான்ஸ்

(CS/57540) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

தியாகம் செய்யாமல் மற்றும் விடாமுயற்சி இல்லாமல் வெற்றிகரமாக இருக்கும் யாரையும் நீங்கள் கண்டுபிடிக்கப் போவதில்லை.

– லூ ஹோல்ட்ஸ்

# இருப்பிழக்கும் இந்தியா!

சீனாவின் இன விவகாரங்களுக்கான அமைச்சர் பான் யூ தலைமையிலான குழுவினர் ஐந்து நாள்கள் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு நாளை வரவுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் அவர்களின் நிகழ்ச்சிநிரலில், யாழ்ப்பாணத்துக்கான பயணமும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. உண்மையில் இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையில், இலங்கையை மையப்படுத்திய வல்லாதிக்கப் போட்டியின் நேரடி மோதலுக்கான ஆரம்பப் புள்ளியாகக் கருதப்படவேண்டிய விடயமாகவே சீன அமைச்சர்கள் குழுவின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

ஒரு நாட்டுக்கு இன்னொரு நாட்டின் அமைச்சர்கள் குழு செல்வதில் எந்த ஆச்சரியங்களுக்கும் இடமில்லை. 21ஆம் நூற்றாண்டுக்கான அரசியலில் அது மிகச் சாதாரணமானது. ஆனால், வெளிவிவகார அமைச்சர்கள் அல்லாமல் வேறெந்த அமைச்சர்களும், அவர்கள் தலைமையிலான குழுவினரும் வருகைதரும்போது நிச்சயம் அதில் ஏதோவொரு 'மாறுபட்ட' நிகழ்ச்சிநிரல் இருக்கவே செய்யும். ஆதலால், சீனாவின் இன விவகாரங்களுக்கான அமைச்சர் பான் யூ தலைமையிலான குழுவினரின் வருகை, இலங்கையின் இனப்பிரச்சினையில் சீனாவின் நேரடித் தலையீட்டின் விளைவா என்று சந்தேகிப்பது ஒன்றும் அவ்வளவு பெரிய அபத்தம் அல்ல. இலங்கையின் இன முரண்பாடுகளையும், அதில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வெற்றிடங்களையும் நிரப்புவதற்காகத்தான் சீனா தலையிடுகின்றது என்றால், அதில் தமிழர்களுக்கு இருக்கும் ஆபத்துகள் ஒருபுறம் இருக்கையில் ' இத்தகைய நகர்வுக்காக இந்தியா வெட்கித் தலைகுனிய வேண்டும். 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரின்போதும், அதற்கு முன்னும் ' பின்னும் இலங்கையின் அரசமைப்பில்கூட இந்தியாவின் தலையீடு இருக்கவே செய்தது. ஆனால், இதுவரை தமிழர்களுக்கான தீர்வை - கிஞ்சித்தும் முன்னகர்த்துவதற்குப் பாரதத்தால் முடியவில்லை. என்றோ தீர்த்திருக்க வேண்டிய விடயத்தை, பிராந்திய முக்கியத்துவம் கருதி இந்தியா உயிர்ப்புடன் பேணியது. இன்றோ, இந்தியா பிராந்திய அரசியலில் நாடித்துடிப்பாகக் கருதிய விடயங்கள் அதற்குத் தலைவலியாக மாறியிருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் காலத்தில் சீனாவின் தலையீடு இலங்கைக்குள் பெரியளவில் இருக்கவில்லை. ஆனால், புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர், இலங்கைக்குள் மட்டுமல்லாமல் வடக்கிலும்கூட சீனா தனது செங்கொடியை செங்கம்பளமாக மாற்றியது. அப்போதும்கூட தமிழர்களா அல்லது கொழும்பா என்ற தீர்க்கமான முடிவை எடுக்கும் திராணி இந்தியாவிடம் இருக்கவில்லை. இப்போதும் எல்லாமும் கைமீறிவிட்டது என்றில்லை. வாய்ப்புகள் மீதமிருக்கின்றன. இலங்கையின் அரசமைப்பில் நேரடித் தலையீட்டைச் செலுத்திய ஒருநாடு என்ற ரீதியில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பெரியதொரு வகிபங்கை இந்தியாவால் நிகழ்த்த முடியும். ஆனால், நிச்சயமாகப் பாரதம் அதைச் செய்யப் போவதில்லை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# ரயில் சேவைகளை மேம்படுத்தத் திட்டம்



போக்குவரத்து பிரதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.18**

**ரயில் சேவையின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.**

மின்சார ரயில்கள் அறிமுகப்படுத்தப்படுவதவற்கு முன்னர், ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும். ரயில் இயந்திரங்களை அதிகரிக்க நாம் முயற்சிக்கின்றோம். ரயில் சேவையின் தரம் மேம்படுவதற்கு ரயில்கள் சரியான நேரத்தில் இயக்கப்படவேண்டும். அது தொடர்பாகவும் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33)

## சுற்றுலாத்துறை வருவாய் அதிகரிப்பு

கொழும்பு, பெப்.18

சுற்றுலாத்துறை மூலமான அந்நியச் செலாவணி வருவாய் கடந்த ஜனவரி மாதத்தில் 362 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34.5 சதவீதத்தால் வருவாய் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானம் 269 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது. அதேவேளை, இந்த ஆண்டின் முதல் 44 நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-33)

## நீர்ப்பாசன பொறியியலாளர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

கொழும்பு,பெப்.18

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவிப் பொறியியலாளர்கள் நேற்றும் இன்றும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பதவி உயர்வு முறைமையில் நிலவும் முரண்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் எனக்கோரியே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-33)

### கொளுத்தும் வெயில் சிறார்கள் அவதானம்

கொழும்பு, பெப். 18

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையைக் கருத்தில் கொண்டு பாடசாலை செல்லும் சிறார்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

தற்போதைய வெப்பமான காலநிலை காரணமாக பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகளின் கால அளவைக் குறைக்கவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25)



## தரமற்ற பொலித்தீனை அகற்றுவதில் அவதானம்

சந்தையில் இருந்து தரமற்ற பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கை அகற்றுவது தொடர்பில் சுற்றுச்சூழல் அமைச்சு கவனம்செலுத்தியுள்ளது. தரமற்ற பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனைக்குகு விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அவற்றைச் செயற்படுத்தாதமை தொடர்பில் முதலில் ஆய்வு செய்யப்படும் என்று சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக படபெந்தி தெரிவித்தார்.

தரமற்ற பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கை அகற்றுவதற்கான விதிகளை மாற்றியமைக்க முடியாது என்பதை உறுதிசெய்வதற்கான ஒரு திட்டம் உருவாக்கப்படும் என்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்தார். (எ-33)

நாளை
புதன்கிழமை - மாசி - 07
19.02.2025
சுபநேரம் : 05.02 - 06.32
ராகுகாலம் : 12.32 - 02.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட் – 2025 பிரதான முன்மொழிவுகள்

## பொருளாதார நடவடிக்கைக்காக அரசாங்கக் காணிகள் குத்தகைக்கு

கொழும்பு, பெப்.18
வளர்ந்துவரும் முதலீட்டாளர்களின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பொருளாதாரத் திருத்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அரசாங்கத்தால் பயன்படுத்தப்படாத அரச நிலங்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்காகக் குத்தகைக்கு விடப்படும். தரிசாக மாறிய பல நிலங்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (எ-இ)

## சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி மானியத்துக்கு நிதி

கொழும்பு, பெப்.18
எதிர்வரும் ஜூலை மாதம் முதல் சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டி மானியத்துக்காக நிதி ஒதுக்கப்படும் என ஜனாதிப தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை முக்கியத்துவம் அளிக்கப்படாத துறைகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மக்களுடைய பணத்தை வீண் விரயம் செய்யாமல் அதைக் கொண்டு பிரதிபலன் அடைய வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-இ)




## எம்.பி.க்களுக்கு வாகனம் இல்லை

கொழும்பு, பெப்.18
இந்த ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய வாகனங்களுக்கான நிதி ஒதுக்கப்படாது என்றும், அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். (எ-இ)

## பெருந்தோட்ட அபிவிருத்திக்கு 4,268 மில்லியன்

கொழும்பு, பெப்.18
பெருந்தொட்ட வீட்டு அபிவிருத்திகளுக்காக 4 ஆயிரத்து 268 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (எ-இ)

## சிறுநீரக நோயாளர்களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவு

கொழும்பு, பெப்.19
சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் புனர்வாழ்வு மையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறுவர்கள், ஆதரவற்ற சிறார்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## திரிபோஷாவுக்கு 5,000 மில்லியன்

கொழும்பு, பெப்.18
தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்குக்கான திரிபோஷா திட்டத்துக்கு வரவு செலவுத் திட்டத்தில் 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

## சொகுசு வாகனங்கள் மார்ச் மாதம் ஏலத்தில்

கொழும்பு, பெப்.18
அதிக செலவை ஏற்படுத்தும் அனைத்து அரசாங்க சொகுசு வாகனங்களும் ஏலத்தில் விடப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய அவர், மார்ச் மாதம் அரசாங்க சொகுசு வாகனங்கள் ஏலத்தில் விடப்படும் என்று தெரிவித்தார். (எ-இ)

## இலங்கையர் தினத்துக்கும் பட்ஜெட்டில் நிதியொதுக்கம்

கொழும்பு, பெப்.18
இலங்கையர் தினம் எனும் பெயரில் தேசிய பெருவிழாவொன்றை நடத்துவதற்காக 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்ட உரையின் போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கூறியவை வருமாறு, "வளமான நாடு, அழகான வாழ்க்கை எனும் திட்டத்தில் இன நல்லிணக்கம் என்பதும் பிரதானமானது. எனவே, இலங்கையர் தினம் எனும் பெயரில் தேசிய விழாவை நடத்துவதற்கு முன்மொழிகின்றேன். தனியார் துறையினரும் இதில் பங்கேற்க முடியும். அனைத்து இன மக்களினதும் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் இவ்விழா அமையும். சுற்றுலாத்துறையின் இரண்டாம் வாரம் இவ்வருடத்தில் ஆரம்பமாகும்போது இவ்விழா நடத்தப்படும்." என்றார். (அ-44)

## டிஜிற்றல் அடையாள அட்டை விரைவில் நடைமுறைக்கு

கொழும்பு, பெப்.18
இலங்கைக்கான புதிய டிஜிட்டல் அடையாள அட்டை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.
டிஜிட்டல் பொருளாதார அதிகார சபையை நிறுவுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

## கர்ப்பிணிகளுக்காக 7000 மில்லியன் நிதி

கொழும்பு, பெப்.18
இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்துக்காக 7 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

## 1000 மில்லியன் ரூபா வீட்டுத்திட்டத்துக்கு!

கொழும்பு,பெப்.18
குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்களுக்கான புனரமைப்புக்காக 1,000 மில்லியன் ரூபா இவ்வாண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். (அ)

## வட்டுவாகல் பாலத்துக்கு 1000 மில்லியன் ரூபா

கொழும்பு, பெப்.18
முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தை மீள நிர்மாணிப்பதற்கென இம்முறை பாதீட்டில் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
2025 ஆம் நிதியாண்டுக்குரிய பாதீட்டு முன்மொழிவுகளை நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்த போதே ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார்.
முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தையும், அந்தப் பாலம் அமைந்துள்ள வீதியையும் புதிதாக நிர்மாணிக்கும் யோசனை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைய இதற்குரிய பணியை ஆரம்பிப்பதற்கே மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவும் ஜனாதிபதி கூறினார். (அ-44)

## முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனத்துக்கு 100 மில்லியன்

கொழும்பு, பெப்.18
முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக 100 மில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நிதியமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
முன்பள்ளி சிறுவர்களின் காலை உணவுக்கான பணமும் 100 ரூபா ரால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாம் ஒற்றுமைப்படாவிடின் தமிழ்த்தேசியம் அழிவுறும்





'கல்விக்குக் கரம்கொடுப்போம்' செயற்றிட்டத்தின் ஊடாக ஜேர்மனிவாழ் தமிழ்மக்களின் பங்களிப்பில் 'கெல்ப் போர் ஸ்மையில்' அமைப்பின் ஊடாக மட்டக்களப்பு புதூர் கிராமத்தில் வசிக்கும் 12 மாணவர்களுக்கும், முல்லைத்தீவு மங்கை குடியிருப்பு ஆலங்குளம் தேறாங்கண்டல் கிராம மாணவர்கள் 30 பேருக்கும் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-22)

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

**மன்னார், பெப். 18**

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் உருவாகாதுவிட்டால் தமிழ்த்தேசியம் என்பது இல்லாதொழியும் நிலை ஏற்படும் என்று ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கட்சிகளினது பிரதிநிதிகளிடையே உள்ள தனிப்பட்ட முரண்பாடுகள் உள்ளிட்ட பல காரணங்களால் ஒன்றிணைந்து செயற்படமுடியாதுள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மீண்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்காக எந்தவித விட்டுக்கொடுப்புகளையும் மேற்கொள்வதற்குத் தயாராக உள்ளேன். தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்படாவிட்டால் புதிய அரசு வடக்கு- கிழக்கில் பிரதேசசபைகள் மற்றும் நகர சபைகளைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது - என்றார். (ச-இ)

# தமிழரசுக் கட்சியினருடன் கனேடியத் தூதுவர் சந்திப்பு

கொழும்பு,பெப்.18

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ்க்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளம் அரசியல் உறுப்பினர்களுக்குமிடையேயான சந்திப்பு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது நடைமுறை அரசியல் விடயங்கள், விசேடமாக தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், தற்போது கனடா அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள், வடக்கு - கிழக்கில் இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் தற்போதைய அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களால் தமிழ் மக்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றார்கள் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டதுடன் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (ச-33-27)

தென்மராட்சி கல்விவலயத்தில்

# ஆரம்பப்பிரிவிலிருந்தே ஆங்கிலப் பாடக்கற்கை

யாழ்ப்பாணம், பெப். 18

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவிலிருந்தே ஆங்கிலப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடநெறியை ஆரம்பிப்பதற்கு ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. எனினும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் தற்போது 25 ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தெரிவுசெய்யப்பட்ட 10 பாடசாலைகளில் ஆங்கில விவாத அணிகளை உருவாக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தென்மராட்சி கல்வி வலயத்தில் ஆங்கில பாடத்துக்கான நிரந்தர சேவைக்கால ஆங்கிலபாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றியவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஓய்வுபெற்றுச் சென்றுள்ள நிலையில் அந்த வெற்றிடத்துக்கும் இதுவரை புதிய நியமனம் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணக் கல்விவலயத்தில் அனைத்துப் பாடங்களுக்கும் மேலதிக ஆளணியினர் உள்ள நிலையில் அவர்களை அருகிலுள்ள வேறு வலயங்களுக்கு விடுவிப்பதற்கான முறையான பொறிமுறைகள் இல்லாமையே பிற பாடசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறைக்கான காரணமாக அமைகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-28)



# சிறுதானியப் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், பெப்.18

சிறுதானியப் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊரெழு வளர்பிறை சனசமூக முன்றலில் நடைபெற்றது.

நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான உறியடியும், கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. வரகு அரிசிப் பொங்கல்களும், குரக்கன் கூழும் பரிமாறப்பட்டுள்ளது.

தமிழர்களின் உணவுப் பண்பாட்டில் சிறுதானியங்கள் அருகிவரும் நிலையில் மீளவும் அவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கிலேயே சிறுதானியப் பொங்கல் விழா தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. (எ-66)





# சர்வதேச சிலம்பம் போட்டி சாதித்தோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்கில் அமைந்துள்ள வேலுப்பிள்ளை செல்லம்மா இலவசக் கல்வி நிலையத்தின் மாணவர்கள் சர்வதேச ரீதியில் சிலம்பம் போட்டியில் சாதித்தமைக்காகக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை செல்லம்மா இலவசக் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வில் மாணவர்களுக்கு சிலம்பம் பயிற்றுவித்த ஆசிரியரான யாழ். மாவட்ட கராத்தே சங்கத் தலைவரும், கல்வி நிலையத்தின் கராத்தே, சிலம்பப் பயிற்றுவிப்பாளருமான க. கமலேந்திரனும் கௌரவிக்கப்பட்டார். (ச-41-27)

# 'கிளீன் சிறீலங்கா' திட்டம் கசிப்பைக் கிளீன்செய்யுமா?

## சிறிநேசன் எம்.பி. கேள்வி

மட்டக்களப்பு, பெப். 18

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'கிளீன் சிறீலங்கா' திட்டம் கசிப்பை இல்லாதொழிக்குமா? என நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் கேள்வி எழுப்பியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமங்களில் வறுமை, போசாக்கின்மை, குடும்ப வன்முறைகள், மாணவ இடைவிலகல், பண்பாட்டுச் சீர்குலைவு போன்ற அனைத்துக்கும் கசிப்பு, போதைவஸ்துப் பாவனை போன்றன காரணங்களாக அமைகின்றன. இவற்றை ஒழிப்பதற்கு 'கிளீன் சிறீலங்கா' உச்சளவில் பயன்படவேண்டும். போதைப்பொருள்களை ஒழிக்காமல் 'கிளீன் சிறீலங்கா' திட்டத்தில் முன்னேற்றம் காணமுடியாது- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கொழும்பு மற்றும் யாழ் நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர்
- சாரதி (கொழும்பில் தங்கிநின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது).

கொழும்பு, யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- **076 440 8948**

## விபத்தில் ஒருவர் பலி

வவுனியா மன்னார் வீதியில், மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி நேற்று இரவு விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அனுராதபுரம் பகுதியை சேர்ந்த நிமல் (வயது-35) என்பவரே உயிரிழந்தவராவார். (ம-110)

## UNIVERSITY OF JAFFNA
## AMENDMENT TO INVITATION FOR BIDS

With reference to the Invitation for Bids published on Uthayan dated 08.02.2025, Veerakesari dated 10.02.2025 and Daily News dated 10.02.2025.

Kindly note the following amendment:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) excluding VAT | Construction Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and Period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | YA/CWP/CW/C2/2025/01 | Supply, Installation and Commissioning of Piped Medical Gas System for the Clinical Department, Faculty of Medicine, University of Jaffna | 33.9 | 75 | EM3 and above | Rs. 340,000.00 05.07.2025 | Rs. 9,000.00 |

The last date for purchasing this Bidding Document changed as 06.03.2025.

The last date for receiving this bidding document shall be 07.03.2025. This bid shall be opened soon after closing **at 10.00 hrs on 07.03.2025.**

Pre Bid meeting will be held at Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on 24th February, 2025.

All the other terms and conditions remain unchanged.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**17/02/2025**

(CR/44348) J-1

## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

தோற்றம்: 15.08.1932
மறைவு: 14.01.2001

திதி: அபரபக்க சஷ்டி

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
இருபத்திநான்கு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

9/1, சுப்ரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## Angel International School, Manipay

## VACANCY

### Driver / சாரதி

**Requirements**

- * சாரதி அனுமதிப்பத்திரம் (பாரவூர்தி) உடையவராக இருத்தல் வேண்டும்.
- * வயதெல்லை: 35 - 55
- * ஆகக்குறைந்தது 02 வருட அனுபவம்

**Further Details:**
**Mr. Jeevan: 077 844 8020**

Angel International School, Mathers Lane, Manipay

(cr.44347) (N-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு: 25.11.1953



இறப்பு: 16.02.2025

### தபோநிதி யோகேஸ்வரன் (குஞ்சக்கா)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தபோநிதி யோகேஸ்வரன் (குஞ்சக்கா) நேற்றுமுன்தினம் (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - செந்தாமலர் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - கனகம்மா தம்பதியரின் மருமகளும், வினாசித்தம்பி யோகேஸ்வரன் (இளைப்பாறிய அதிபர் - துணைவி அ.மி.த.க.பாடசாலை வட்டுக்கோட்டை. மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், Dr. திவ்யா கஜேந்தன் (வைத்தியர் மீரிகம), ரம்யா (ஆசிரியர் ), Dr. சரண்யா கோகுலன் (வைத்தியர் - யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr கஜேந்தன் (வைத்தியர் - கொழும்பு கண் வைத்தியசாலை), Dr. கோகுலன் (வைத்தியர் - போதனா வைத்தியசாலை அனுராதபுரம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சொரூபநிதி, ஹரிமுகன், ஸ்ரீகுமாரன், துருபன் (நோர்வே), சயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் மகேஸ்வரன், ஞானேஸ்வரி, சந்திரநிதி, மன்மதராஜா, மாலினி, யசோதா, சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், லக்ஷ்வதாவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.02.2025) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**மானிப்பாய் மேற்கு,**
**மானிப்பாய்.**

யோகேஸ்வரன் 076 586 2469
கோகுலன் 077 199 9657

(Cs/) N-1

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது)
### பதவி வெற்றிடம்
### விண்ணப்பம் கோரல் - வெளிவாரி
### பதவி எழுதுநர் குறி இல 302/13

சம்பள அளவுத் திட்டம் :-
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2022 சுற்று நிருபத்திற்கு அமைவாக 302/13 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்)
18360-160X10-170X10-21660
220320-1920X10-2040X10-259920
இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்
(விண்ணப்பதாரிகள் சங்கத்தின் எல்லைப்பரப்பில் வசித்தல் வேண்டும்)

வயதெல்லை : 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர் / காசாளர் / கணினிப் பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /

கூட்டுறவு ஊழியர் 15 வது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர் / காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. / க.பொ.த சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

விண்ணப்பமுடிவுத் திகதி :- 04.03.2025

விண்ணப்பிக்கும் முறை :-

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 25.00 இனை செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "எழுதுநர் 302/13 பதவிக்கான விண்ணப்பம் " எனக் குறிப்பிட்டு " தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது), இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் " என்னும் முகவரிக்கு 2025.03.03 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**மு.ஜெ.சுஜீந்திரன்,**
**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது**

(CR/44350) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், பெப்.18

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்டநிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

உடுத்துறையிலிருந்து ஆரம்பமான ஆண்களுக்கான மரதன் ஓட்டநிகழ்வு கட்டைக்காடு பாடசாலையில் நிறைவு பெற்றது. பெண்களுக்கான மரதன் ஓட்டநிகழ்வு ஆழியவளையில் ஆரம்பமாகி கட்டைக்காடு பாடசாலையில் நிறைவுபெற்றது. (ச-41-27)

# மாற்றுத்திறனாளிகளின் தடகளப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.18

மாற்றுத்திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தும் வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்திய மாவட்ட தடகள விளையாட்டுப்போட்டி யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுமைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

போட்டியில் நல்லூர்ப் பிரதேச செயலகம் முதலாவது இடத்தையும், பருத்தித்துறைப் பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தையும், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. மேலும் வெற்றியீட்டிய வீரர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக்கேடயங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் விவகாரம் புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வர்த்தகமும் வாணிபமும் மாகாண அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் பங்கேற்றார். (ச-41-27)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி பாடசாலை முதல்வர் அருட்சகோதரர் சந்தியாகு தலைமையில் பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் டு.இளங்கோவன், கௌரவ விருந்தினராக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் னு.தேவராஜ், விசேட விருந்தினர்களாக மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபால, உதவிக் கல்விப்பணிப்பாளர் ஞானராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-213)







சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாகத் தெய்வீக இன்னிசை விருந்து நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபோதையில் பொலிஸ் உத்தியோகத்தர் மாணவிகளுடன் தவறாக நடக்க முயற்சி!

முல்லைத்தீவு, பெப். 18
முல்லைத்தீவு மல்லாவி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர், முல்லைத்தீவில் உள்ள பாடசாலை ஒன்றுக்குள் சிவில் உடையில் அத்துமீறி நுழைந்து மாணவிகளிடம் தவறாக நடக்க முயற்சித்துள்ளார்.


பாடசாலையின் விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று மாலை அவர் இந்த இழிவான செயலில் ஈடுபட்டுள்ளார்.

மாணவிகள் இந்த விடயத்தை உடனடியாக அங்கிருந்த பெரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றதைத் தொடர்ந்து அவர் அங்கிருந்தவர்களுடன் முரண்பட்டுக்கொண்டு வெளியேறியுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 03 . 1946



மறைவு 17 . 02 . 2025

### சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (17.02.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் இரஞ்சநாயகியின் அன்புக் கணவரும், இரகிதன் அவர்களின் பாசமிகு தந்தையும், பாமாவின் அன்பு மாமனாரும், ரகினிகா, சபரீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.02.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சதானந்தா லேன்,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் - இரகிதன் 0778408988

## மரண அறிவித்தல்

மலர்வு 04 . 04 . 1943



இறப்பு 13 . 02 . 2025

### செல்லத்துரை சங்கரலிங்கம்

**(கொழும்பு மாவட்ட சமாதான நீதவான் JP, ஓய்வு பெற்ற லீலா பிறஸ் முகாமையாளர்)**

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, கொழும்பு, கனடாவை (Whitby) வதிவிடங்களாகவும் கொண்ட செல்லத்துரை சங்கரலிங்கம் அவர்கள் கடந்த (13.02.2025) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கலட்சுமியின் ஆருயிர்க் கணவரும், சுதர்விழி (Canada), சுதர்சன் (Canada), சுஜாத்தா (France) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருக்குமார் (Tom Thiru-canada), பகீரதி (Canada), நாகேஸ்வரன் (France) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், ஞானேஸ்வரி, கணேசலிங்கம், இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr தனிஷா (Canada) - Dr சுகன் (U.K), திமதி (Lawyer - canada )- Dr ரீனா (Canada), தனீக்கா (Lawyer- Canada), நிஷானி (U of T - canada), கிரிஷா (Canada), சஞ்சய் (Canada), சங்கீதா - சயன் (Bailiff's Assistant - France), கவியரசி (Credit Specialist - France) ஆகியோரின் பாசமிகு பேரனும், சகினா (France), சகின் (France) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.02.2025) புதன்கிழமை பி.ப.5:00 முதல் 9:00 மணி வரை உறவுகளின் அஞ்சலிக்காக Ajax crematorium & visitation center, 384 Finley Ave, Ajax, ON L1S2E3 canada இல் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் (20.02.2025) வியாழக்கிழமை அன்று காலை 8:00 தொடக்கம் மு.ப 11 :00 மணி வரை நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
சுதர்சன் - மகன் ([illegible] Canada)
ரமணன் - பெறாமகன் (94773344994 )

(CS 25[illegible])

# நாட்டில் இருக்கும் பிரச்சினைகளில் கலாநிதிப் பட்டம்தான் முக்கியமா?

## முன்னாள் சபாநாயகர் கேள்வி

என்னுடைய கலாநிதிப் பட்டச் சான்றிதழ்தான் இப்போது மக்கள் முன் காணப்படும் பிரதான விடயமா? என முன்னாள் சபாநாயகர் ரன்வெல கேள்வி எழுப்பியுள்ளார். பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கல்விச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டுமென எங்காவது சட்டத்தில் கூறப்பட்டுள்ளதா? அல்லது நாடாளுமன்ற மரபா? இதைவிட முக்கியமான பல பிரச்சினைகள் எம்முன்னே உள்ளன. இது ஒரு கீழ்த்தரமான உத்தி, கீழ்த்தரமான அரசியல். நாங்கள் எம்மை மக்களுக்காக அர்ப்பணித்துள்ளோம். மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவதே எமது தலையாய பணி என்றார். முன்னாள் சபாநாயகர் ரன்வெல ஜப்பானியப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றார் என்று நாடாளுமன்ற இணையத்தளத்தில் அவரது பெயரின் பின்னால் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அந்தப் பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் அவரின் பெயரை காணவில்லை என சர்ச்சைகள் எழுந்ததையடுத்து ரன்வெல சபாநாயகர் பதவியிலிருந்து விலகியிருந்தார். (எ-33-6)

## நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப் .18
பேரல் அமைப்பின் நீண்ட நாள் செயற்பாட்டாளர் அமரர் சிறிதரன் சபாநாயகரின் நினைவு நிகழ்வு யாழ்.சர்வோதய தலைமையகத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் இரத்ததான முகாம், இலவச சட்ட ஆலோசனை, முன்னாள் தேர்தல் ஆணையாளர் முகமட்டுடன் உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல், முதியோர் இல்லமொன்றுக்கு சத்துணவு வழங்கல், தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவ நிலைய நோயாளிகள் பயன்பாட்டுக்கென சக்கர நாற்காலிகள் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,9)

## திருவாசகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.18
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் சிறப்பிடி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

"மாணிக்கவாசகரும் யாத்திரைப்பத்தும்" எனும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர், பிரசங்கசுடர் நித்திய பாபுதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ். தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு வித்தியாலய மைதானத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது. வித்தியாலய முதல்வர் செ.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கூ.நோபேட் உதயகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை சமுத்திர பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சிவாஜி ஜயகீர்த்தி, பி.பி.பே. நிறுவனத்தின் உதவிக் கணக்காளர் இ.ரகுசாந் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-25)

+++++

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி, பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் குலசிங்கம் திலீபன் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வட மாகாணப் பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் பிரதம விருந்தினராகவும், கோண்டாவில் ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் துரைவீர சிங்கம் சுதன் சிறப்பு விருந்தின ராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-25,66)

+++++

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ். மயிலணி சைவமகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி, பாடசாலை அதிபர் பா. பார்த்தீபன் தலைமையில் மயிலணி முருகமூர்த்தி ஆலய முன்றலில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி அ.ஜெயக்குமரன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. சி.சயந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிய...

எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மானிய விலையில் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி, லங்கா சதொச நிறுவனத்தின் மூலம் அரிசி, ரின் மீன், பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் கருவாடு உள்ளிட்ட உலர் உணவுப் பொதியை வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. இதற்காக ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## வடக்கில்...

யுடன் இருக்கவேண்டும் என்றும் தேசிய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் வானிலை ஆய்வுமையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்கள் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் சில இடங்களில் வெப்பக் குறியீடு, அதாவது மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை 'எச்சரிக்கை' மட்டத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளர்களின் உடல்நிலை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-இ)

## நாடு...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம், ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்று முன்வைக்கப்பட்டது. பட்ஜெட் தொடர்பில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

பாதீட்டு உரையையும், ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட, 'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த பட்ஜெட் எத்தகையது என்ற உண்மை தெரியவரும்.

வரவு - செலவுத் திட்டத்தில் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டமோ, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களின் கடன்களுக்கோ தீர்வு இல்லை. விவசாயம், கடற்றொழில் துறை, தோட்டக் கைத்தொழில் துறையினர் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

புதிய கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்குச் செல்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடையில் கூறியிருந்தபோதும், அவர் நேரடியாகவே சர்வதேச நாணய நிதியத்தின் அடிச்சுவடுகளை பின்பற்றிவருகின்றார்.

ஆட்சிக்கு வந்ததும் நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொள்வதாகக் கூறினாலும், அதற்கு மாற்றாகவே ஜனாதிபதி இந்த வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி மக்கள் ஆணையைப் புறக்கணித்து சர்வதேச நாணய நிதியத்தின் பணயக்கைதியாக மாறியுள்ளார்.

அரச சேவையில் ஒவ்வொரு 6 மாதத்துக்கு ஒரு தடவையும் சம்பள உயர்வு வழங்கப்படும் என்றனர், ஆனால் இறுதியில் 3 வருடங்களில் சொற்பத் தொகையான சம்பளம் உயர்த்தப்படுகின்றது. இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு இது போதாது. தனியார் துறையினருக்கு மாற்றாந்தாய் கவனிப்பு வழங்கப்பட்டுள்ளது' - என்றார். (அ-ம-44)

## தமிழர்...

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் காலங்களில் வீடுகள் எரிக்கப்பட்ட வரலாறுகள் உள்ளன. ஆனால் இலங்கை வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றில்கூட தேர்தல் காலத்தில் நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் இங்குதான் நடந்துள்ளது. அதுவொரு வரலாற்றுத் தவறு. அந்த வரலாற்றுத் தவறுக்கு நீதி வழங்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை எரித்த வலி அந்த மக்களின் மனங்களில் இன்னும் உள்ளது. தேர்தலுக்காக நூலகத்தை எரிப்பது நியாயமா? யாழ்ப்பாண மக்களுக்கும், யாழ். நூலகத்துக்கும் இடையில் ஆத்மார்த்தமான தொடர்புள்ளது. சப்பாத்தை கழற்றி வைத்துவிட்டுத்தான் உள்ளே செல்வார்கள். யாழ்ப்பாணப் பொதுநூலகம் நிச்சயம் எம்மால் மேம்படுத்தப்படும். தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றது - என்றார். (அ-ம-44)

## பட்ஜெட்...

தலைவர் சஜித் பிரேமதாஸ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஆகிய இருவரில் ஒருவர் விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றவுள்ளனர். பெப்ரவரி 25ஆம் திகதி வரை ஏழு நாள்கள் 2ஆம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும். பெப்ரவரி 25ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை (4 சனிக்கிழமைகள் உள்ளடங்கலாக) 19 நாள்கள் இடம்பெறவுள்ளது. வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பி.ப 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ-ம-44)

## அரச...

தொகையையே ஊதிய உயர்வாகக் குறிப்பிட்டுள்ளது. அரச ஊழியர்களைப் பொறுத்தவரை இந்த பட்ஜெட் பெரும் ஏமாற்றமே என்று அரச மற்றும் மாகாண அரச தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஜித் கே.திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத்திட்டத்தை அரச ஊழியர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் எதிர்நோக்கினார்கள். ஆனால் அரச ஊழியர்களை மிகவும் ஏமாற்றமடையச் செய்யும் வகையிலான வரவு - செலவுத்திட்டமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில், அரச ஊழியர்கள் வீதிகளில் இறங்கி 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டத்தை வழிநடத்தியது இந்த அரசாங்கம்தான். ஆதலால், அரச ஊழியர்களின் நம்பிக்கைகள் இன்று தகர்ந்துபோயுள்ளன. இந்த பட்ஜெட்டை அரச ஊழியர்களுக்கு விழுந்த பேரிடியாகவே நாம் பார்க்கின்றோம் - என்றார். (அ-ம-இ)

## 3 வயதுக்...

மீட்கப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டை தெற்குப் பகுதியைச் சேர்ந்த பெருமாள் மகிந்தன் (வயது-30) மற்றும் தனுசன் (வயது-3) ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.

பெருமாள் மகிந்தனும், அவருடைய மனைவியும், தங்கையும் மற்றும் மருமகனும் துணவி பகுதிக்குச் சென்றுவிட்டு மீளத் திரும்பியுள்ளனர். இதன்போது, பெருமாள் மகிந்தனும் அவருடைய மருமகனான தனுசன் டனுசனும் சைக்கிளில் முன்னதாகச் சென்றுள்ளனர்.

சற்றுநேரம் கழித்து குறித்த வீதியால் வருகைதந்த தங்கையும், மனைவியும் வீதியில் சைக்கிள் நிற்பதை அவதானித்துவிட்டு அவர்களைத் தேடியுள்ளனர். இதன்போது, குழந்தை வயல் கிணற்றில் மிதப்பதை அவதானித்து அவரை உடனடியாக மீட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்றுள்ளனர்.

எனினும் அந்தக் குழந்தை முன்னதாகவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதும், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கிணற்றில் தேடுதலை மேற்கொண்டபோது பெருமாள் மகிந்தன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இறப்புத் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-125-27)

## உள்ளூராட்சித்...

இந்தச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நேற்று நடைபெற்று, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## வடக்கின்...

அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அண்மையில் பங்கேற்றிருந்தேன். இதன்போது இந்த வருடத்துக்குள் 5 ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவிடமுடியும் என பணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இதைவிடவும் கூடுதல் நிதி வழங்கவிருந்தோம். ஆனால் இந்தத் தொகை போதுமெனக் கூறப்பட்டது. எனவே, குறித்த நிதியை 8 மாத காலப் பகுதிக்குள் பயன்படுத்தி தேவையான அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்கும் பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது - என்றார். (அ-ம-44)

## ஓய்வூதியம்...

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்பு ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியர்களின் ஓய்வூதியமும் மூன்று கட்டங்களாக அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

## ரணிலின்...

கொழும்பு, பெப். 18

சர்வதேச நாணயநிதியத்துக்கும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட வரவு - செலவுத் திட்டத்தையே ஜனாதிபதி அநுர முன்வைத்துள்ளார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விமர்சித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், பொருளாதார நிபுணருமான கபீர் ஹாசிம் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏழு தசாப்தகால பயணம் சரியென்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதையே பாதீட்டு முன்மொழிவுகள் உறுதிப்படுத்துகின்றன. இன்னும் சொல்லப்போனால், ரணில் விக்கிரமசிங்கவின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தை அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ளார் என்பதுபோல்தான் நிலைமை உள்ளது.

இதுவரை காலமும் நாட்டில் இருந்த பொருளாதார முறைமை தோல்வியெனக் கூறிவந்த ஜே.வி.பி.யினரின் தலைவர், சர்வதேச நாணயநிதியத்தின் நெறிமுறைகளுக்கு அமைய செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார் - என்றார்.

(அ-ம-44)

## ஆதரவற்ற...

பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாவை உதவித் தொகையாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தொகையில் 2 ஆயிரம் ரூபாவை வங்கிக் கணக்கில் வைப்பிலிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## வரவு - ...

ஆண்டுக்கான வருமானமாக 4 ஆயிரத்து 990 பில்லியன் ரூபாவும், மொத்த செலவினமாக 7 ஆயிரத்து 190 பில்லியன் ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையாக 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா பதிவாகியுள்ளது. (அ-ம-44)

## ஊடக...

நாட்டின் கலாசார வளத்திற்கு பங்களிப்பைச் செய்யும் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு என அடுக்குமாடிக் குடியிருப்புத் தொகுதி ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

யாழ். இந்து (K) குடும்பத்தைச் சேர்ந்த 1991 இல் பிறந்த விசாக நட்சத்திரம் பாதம் 1 பாவக்கிரகம் 3 சொந்தமாக கடை வைத்திருக்கும் மணமகனிற்கு மணமகள் தேவை.

**076 640 8489**

(CR/44349) J-1

# மாணவியிடம் அத்துமீறல்!

### ஒருவர் கைது

வவுனியாவில் மாணவி குளிப்பதை வீடியோவாகப் பதிவுசெய்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது தொலைபேசி இராசாயன பகுபாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம110)




இலங்கை குடும்பக் கட்டுப்பாட்டு சங்கத்தின் வடமாகாண தொழிற்சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக அலுவலர்களுக்கான மருத்துவமுகாம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 9)



ஒளிரும் வாழ்வு இல்லத்தின் ஏற்பாட்டில், மாற்றுத்திறனாளிகளை மதிப்பளிக்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள ஒளிரும் வாழ்வு இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ச-25,113)







வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கல்விகற்கும் 40 மாணவர்களுக்கு கடந்த வியாழக்கிழமை சிவதீட்சை வழங்கப்பட்டது. அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சைவசித்தாந்த அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் சிவஸ்ரீ இ.குமாரசுவாமி குருக்களால் சிவதீட்சை வழங்கப்பட்டது. (ச-9)



தேசிய மக்கள் சக்தியின் பூநகரிப் பிரதேசத்துக்கான பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் கலந்துகொண்டு கட்சி அலுவலகத்தைத் திறந்துவைத்தார். (ச-41-113)

ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரியின் முதல்வர் எம்.அன்ரன் அமலதாஸ் தலைமையில் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக தீவகக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்லையா இளங்கோ பங்கேற்றார். (ச-41-27)





## மரதன் ஓட்டம்

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வான மரதன் ஓட்டம் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை தருமபுரம் மத்திய கல்லூரி முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு பிரமந்தனாறு மகாவித்தியாலயம் வரை சென்றடைந்தது. (ச-33-113)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 18.02. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.